**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING EVIRONMENTAL CLEARANCE FROM STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA) – TAMIL NADU FOR THE PROPOSED ROUGH STONE & GRAVEL QUARRY OF M/s. P. SANKAR, ROUGH STONE & GRAVEL QUARRY, OVER AN EXTENT OF 0.94.50 HECTARE LOCATED IN S.F.No.22/1, OF EZHACHERI VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT, HELD ON 07.01.2025 AT 12.00 PM IN M/s. R.S.E MAHAL, MAMANDUR, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Thiru. Baskara Pandiyan, IAS., | District Collector,<br>Tiruvannamalai. |
| 2. | Tmt. T. Kalaiselvi | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 3. | Thiru. K. Prem Kumar | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 4. | Selvi. R. Vijayashree | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 5. | Thiru. K. Perumal | Tashildar (i/c),<br>Vembakkam Taluk,<br>Tiruvannamlai. |
| 6. | Thiru. K. Ravikumar | Village administrative officer,<br>Ezhacheri Village,<br>Vembakkam Taluk |
| 6. | Tmt. A. Amutha | Assistant Manager,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 5. | Public and Environmentalists | 73 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, on behalf of the Tamil Nadu Pollution Control Board has welcomed the District Collector, Tiruvannamalai who presided the public Hearing meeting, the Government officials, the public, the environmentalists and explained the need of the public Hearing for obtaining Environmental Clearance for the proposed rough stone and gravel quarry as follows.

"As per the Environmental Impact Assessment Notification 2006 all the projects and activities listed in the schedule to the notification, require prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority (SEIAA). The Environmental Clearance process involves public consultation, which is why the public hearing meeting is being conducted for the proposed Rough stone and Gravel Quarry project by M/s. P. Sankar. This project aims to quarry rough stone and gravel over an extent of 0.9450 hectares in Ehzacheri Village, Vembakkam Taluk, Tiruvannamalai District.

As per EIA, 2006 the mining projects (Individual or Cluster extent) above 5 hect of that area requires prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority. This public hearing meeting will be recorded and submitted in the form of audio and video to the State Environment Impact Assessment Authority. Accordingly, the public notice for this public hearing was published in dailies of "Times of India" (English) & "Dinamalar" (Tamil) on 28.11.2024 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed Rough stone & gravel quarry of M/s. P. Sankar.

The District Environmental Engineer, further stated that the proposed quarry project and its Environmental Impact Assessment Study report details will be explained through a power point presentation by the project proponent's consultant. Following the presentation, the public can express their views, suggestions and comments one by one either in oral or in written format on the said project. The opinions & suggestions of the public & environmentalists will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority."

The District Collector, Tiruvannamalai requested the project proponent to explain about the proposed Rough stone & gravel quarry and the Environmental Impact Assessment study conducted by them to the public in detail.

On behalf of the project proponent, Tmt. K. Abirami, Coordinator, M/s. Global Mining Solutions, Salem (Consultant for the proposed rough stone & gravel quarry of M/s. P. Sankar) explained the details of the project and the Environmental Impact Assessment study conducted by them with help of power point presentation.

Then the District Collector, Tiruvannamalai requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one and instructed the participants to provide their name and address before sharing their feedback, and to do so one by one, to ensure an orderly & transparent process.

The following are the views/suggestions/comments represented by the public.

**1. Tmt. Meena, Arasanipalayam village,**

She stated that, the proposed M/s. P. Sankar, Rough Stone & Gravel Quarry would not have any adverse impact on them. She highlighted that the quarry has improved the livelihoods of twenty to thirty families, demonstrating its positive influence on the local community and she concluded her speech by **expressing her support** for the proposed quarry.

**2. Thiru. Manohar, Arasanipalayam village**

He expressed wholehearted support for the proposed M/s. P. Sankar Rough Stone & Gravel Quarry, emphasizing its potential benefits for the local community and concluded his speech by **expressing his support** for the proposed quarry

**3. Thiru. Mani, Chinna Ezhacheri village,**

He greeted the honourable District Collector, District Environmental Engineer, and the general public. He stated that the proposed quarry will improve the livelihoods of over 200 families. He expressed his confidence that the quarry will operate within its stipulated guidelines and concluded his speech by **extending his support** for the proposed quarry, affirming that he has no objections to its establishment.

**4. Thiru. Anbarasan, Chinna Ezhacheri village,**

He **expressed his support** for the proposed quarry, stating that it will benefit more than 50 families, and concluded by affirming his consent for the project.

**5. Thiru. Velu, Ezhacheri village,**

He **expressed his support** for the proposed quarry, stating that it will greatly benefit the villagers, providing them with numerous amenities. He concluded his speech by affirming the villagers' complete consent and endorsement for the quarry's establishment.

**6. Thiru. Boobalan, Arasanipalayam village,**

He **expressed his support** for the proposed quarry, stating that its establishment will bring economic prosperity to the local community, and concluded by welcoming the project.

**7. Tmt. Rani, Arasanipalayam village,**

She stated that 10-20 families in their village depend on the proposed quarry and have greatly benefited from it, without experiencing any adverse effects. She concluded by **expressing her support** for the quarry's establishment.

**8. Thiru. Moorthy, Ezhacheri village,**

He extended respects to the District Collector, District Environmental Engineer, and all government officials present at the public hearing. He expressed that he had no objections to the establishment of the rough stone and gravel quarry, provided it operates according to regulations. He mentioned that drivers must have proper licenses, as their current behaviour of driving creates unsafe conditions. He acknowledged that the quarry has brought economic benefits, such as improved roads and drinking water facilities, but noted that the roads are severely affected during the rainy season. He suggested that quarry operators should maintain the roads in good condition instead of driving on damaged ones, which disrupts the

daily life of the villagers. He mentioned that heavy vehicle drivers use earphones while driving, which should be addressed since schoolchildren and the elderly also walk on the same roads. He concluded by stating that if the quarry operators maintain the roads properly and adhere to regulations, it would be beneficial. He suggested forming a committee to ensure compliance with these regulations and provide guidance on operating the quarry properly.

**The following 06 members of the public have expressed their opinion in writing on the proposal of this Rough stone and Gravel quarry.**

| S.No | Name& Place | Comment |
|---|---|---|
| 1 | Thiru. M. Muthu Raja,<br>Ramanathapuram District. | Expressed support in favour of the proposed quarry |
| 2 | Village Public,<br>Ezhacheri Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 3 | M/s.Youth institute for poor people,<br>Tirupathi District,<br>Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 4 | Thiru. T. Anil Reddy,<br>Karimnagar, Telagana. | Expressed support in favour of the proposed quarry |
| 5 | Thiru.A. Subramaniyam,<br>Kadapa District,<br>Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 6 | Thiru.S.Kanchana Charry,<br>Rangareddy District,<br>Telegana. | Expressed support in favour of the proposed quarry |

As there were no views/comments raised further, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, with the District Collector's approval, has announced that the meeting came to an end with the vote of thanks.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 28.11.2024 for notifying the public hearing meeting)
2. The certificate issued by the Village Administrative Office for the Audio announcement and issue of notices.
3. Attendance sheet at the public hearing (Total pages 08 & 73 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing/Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. EIA Report & Executive summary (Tamil & English).
7. Petitions received through Public Hearing Meeting - 06 numbers.

13/1/2025

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

13/01/2025

**District Collector,**
**Tiruvannamalai.**

(5/6)

**திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், எழாச்சேரி கிராமத்தில் புல எண். 22/1, 0.94.50 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். P. சங்கர், சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கத்திற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 07.01.2025 அன்று திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மாமண்டூரில் அமைந்துள்ள தி/ள். R.S.E மஹாலில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.**

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு.தெ. பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., | மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை. |
| 2. | திருமதி. தி. கலைச்செல்வி | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 3. | திரு. க. பிரேம் குமார் | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 4. | செல்வி.இரா. விஜயஸ்ரீ | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 5. | திரு.க. பெருமாள் | வட்டாட்சியர் (i/c), வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை. |
| 6. | திரு.கு.ரவிக்குமார் | கிராம நிர்வாக அலுவலர், எழாச்சேரி கிராமம், வெம்பாக்கம் வட்டம். |
| 7. | திருமதி. அ. அமுதா | உதவி மேலாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 8. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (73 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகித்த மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை

அவர்களையும், கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த அரசு அதிகாரிகளையும், பங்கேற்ற பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சசூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் அவசியத்தை பின்வருமாறு எடுத்துரைத்தார்.

"திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், எழாச்சேரி கிராமத்தில், 0.94.50 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. P. சங்கர், சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்க நிறுவனமானது கற்களை வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006-ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை ஒலி மற்றும் ஒளி பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி திரு.P. சங்கர், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் திரு. R.S.E மஹாலில் 07.01.2025 அன்று நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறுமென தினமலர் மற்றும் டைம்ஸ் ஆப் இந்தியா செய்தி தாள்களில் 28.11.2024 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும்

சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கும் போது பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினர் இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்வார்கள். தற்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை தொடங்கி வைப்பார்கள். அதன் பின்னர் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள்".

மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்கள் சுரங்க நிர்வாகத்தினரை உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார். மேலும் பொது மக்கள் கருத்து தெரிவிக்கும் போது தங்கள் பெயரை குறிப்பிட்டு கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திருமதி. கே. அபிநயா, ஒருங்கிணைப்பாளர், தி/ள். குளோபல் மைனிங் சொல்யுசன்ஸ், சேலம் ( தி/ள். P. சங்கர், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் ஆலோசகர்) அவர்கள் நிழற்பட விளக்கக் காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்கள், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார். அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

1. **<u>திருமதி. மீனா, அரசாணிப்பாளையம் கிராமம்</u>**

இவர் கூறுகையில், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.சங்கர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியால் எங்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. மேலும் இந்த குவாரியினால் இருபது, முப்பது குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் மேம்பட்டு உள்ளன என்று இந்த குவாரி அமைவதற்கு தனது **ஆதரவை தெரிவித்து** உரையை முடித்துக் கொண்டார்.

2. **<u>திரு. மனோகர், அரசாணிப்பாளையம் கிராமம்</u>**

இவர் கூறுகையில், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.சங்கர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைவதற்கு எங்களுடைய முழு ஆதரவை தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறி குவாரி அமைவதற்கு தனது **ஆதரவை தெரிவித்து** உரையை முடித்துக் கொண்டார்.

3. **<u>திரு. மணி, சின்னஎழாச்சேரி கிராமம்</u>**

இவர் கூறுகையில், வருகை புரிந்திருக்கும் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியருக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், பொதுமக்கள் அனைவருக்கும் தனது வணக்கத்தினை தெரிவித்துக் கொண்டார். இந்த குவாரி அமையவிருப்பதால் 200க்கும் மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்படுகின்றன. மேலும் இந்த குவாரி அதன் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடக்கும் என்று நம்புகிறேன். இந்த குவாரி அமைவதில் எனக்கு எந்தவித ஆட்சபனையும் இல்லை என்று குவாரி அமைவதற்கு தனது **ஆதரவை தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

4. **<u>திரு. அன்பரசன், சின்னஎழாச்சேரி கிராமம்</u>**

இவர் கூறுகையில், இந்த குவாரியால் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைகின்றன. எனவே இந்த குவாரி வருவதில் எனக்கு சம்மதம் என்று குவாரி அமைவதற்கு தனது **ஆதரவை தெரிவித்து** உரையை முடித்துக் கொண்டார்.

5. **<u>திரு. வேலு, எழாச்சேரி கிராமம்</u>**

இவர் கூறுகையில், இந்த குவாரி எங்கள் கிராமத்தில் அமைய விருப்பதால் எங்கள் கிராம மக்கள் மிகவும் பயனடைவர். இந்த குவாரி எங்களுக்கு பல வசதிகளை செய்து கொடுத்திருக்கிறது. எனவே இந்த குவாரி வருவதில் எங்களுக்கு முழு சம்மதம் என்று குவாரி அமைவதற்கு தனது **ஆதரவை தெரிவித்து** உரையை முடித்துக் கொண்டார்.

6. **<u>திரு. பூபாலன், அரசாணிப்பாளையம் கிராமம்</u>**

இவர் கூறுகையில், இந்த கல்குவாரி அமைவதால் எங்கள் ஊர் மக்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைகின்றனர். எனவே, இந்த குவாரியை நாங்கள் வரவேற்கிறோம் என்று குவாரி அமைவதற்கு தனது **ஆதரவை தெரிவித்து** உரையை முடித்துக் கொண்டார்.

7. **<u>திருமதி. ராணி, அரசாணிப்பாளையம் கிராமம்</u>**

இவர் கூறுகையில், எங்கள் கிராமத்தில் இந்த குவாரியை நம்பி 10–20 குடும்பங்கள் உள்ளன. நாங்கள் இந்த குவாரியால் மிகவும் பயனடைகிறோம். இந்த கல்குவாரியால் எங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு தனது **ஆதரவை தெரிவித்து** உரையை முடித்துக் கொண்டார்.

8. **<u>திரு. மூர்த்தி, எழாச்சேரி கிராமம்</u>**

இவர் கூறுகையில், இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கல்குவாரி அமைவதில் எனக்கு எந்த ஆட்சபனையும் இல்லை ஆனால் இந்த கல்குவாரி விதிமுறைகளுக்கு உட்பட்டு இயங்க வேண்டும். வாகனம் ஓட்டுபவர்கள் முறையான ஓட்டுனர் உரிமம் பெற்று வாகனத்தை இயக்க வேண்டும். இவர்களால் பாதுகாப்பற்ற ஒரு சூழ்நிலை நிலவுகிறது. இந்த கல்குவாரியால் எங்கள் கிராமத்தின் பொருளாதாரம் மிகவும் உயர்ந்துள்ளது என்பதை நான்

மறுக்கவில்லை. சீரமைக்கப்பட்ட சாலை, குடிநீர் வசதி, அனைத்தும் கிடைக்கின்றது ஆனால் மழைக்காலங்களில் சாலை பெரிதும் பாதிக்கப்படுகிறது. அப்பொழுது, அந்த சாலையை சீரமைக்க குவாரி உரிமையாளர்கள் எந்த முயற்சியும் எடுக்காமல் சீர் குலைந்த சாலை மீது வாகனத்தை இயக்குகின்றனர் இதனால் சாலை பெரிதும் பாதிக்கப்படுகிறது எங்கள் அன்றாட வாழ்வின் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே, குண்டும் குழியுமாக இருக்கும் சாலைகளை குவாரி உரிமையளார்கள் அவ்வப்பொழுது சீரமைத்தால் நன்றாக இருக்கும். மக்களும் வாழ வேண்டும் குவாரியும் இயங்க வேண்டும் அதையே நாங்கள் எதிர்பார்க்கிறோம். கனரக வாகனத்தை இயக்கும் ஓட்டுனர்கள் தங்களது காதுகளில் செவி பேசியை பொருத்திக்கொண்டு ஓட்டுகின்றனர். இதனை தடுக்க வேண்டும் ஏனெனில் அதே சாலையில் தான் பள்ளி மாணவர்களும், முதியவர்களும் செல்கின்றனர். இதனை முறையாக அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும். இந்த விதிமுறைகளை பின்பற்ற ஒரு குழு அமைத்து ஆலோசனை செய்து முறையாக இந்த குவாரியை நடத்தினால் நன்றாக இருக்கும் என கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**கீழ்கண்ட 06 நபர்கள் எழுத்துமூலமாக இக்குவாரி அமைவது குறித்த தங்களின் கருத்துகளை தெரிவித்தனர்.**

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1 | திரு. எம். முத்து ராஜா,<br>இராமநாதபுரம் மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 2 | கிராம பொதுமக்கள்,<br>எழச்சேரி கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் |
| 3 | தி/ள். யூத் இன்ஸ்டிடியூட் ஃபார் பூர் பீப்பில்,<br>திருப்பதி மாவட்டம்,<br>ஆந்திரப் பிரதேசம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் |
| 4 | திரு டி. அனில் ரெட்டி,<br>கரீம்நகர்,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

| | | |
|---|---|---|
| 5 | திரு. எ. சுப்பிரமணியம்,<br>கடப்பா மாவட்டம்,<br>ஆந்திரப் பிரதேசம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 6 | திரு. எஸ். காஞ்சனா சாரி,<br>ரங்காரெட்டி மாவட்டம்,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால், மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெறுவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அறிவித்தார்.

**<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 28.11.2024).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (08 பக்கங்கள் 73 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 06 மனுக்கள்.

13/1/2025

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை**

13/01/2025

**மாவட்ட ஆட்சியர்,**
**திருவண்ணாமலை**

(1/6)